# தூதன்

தூதன்-25 மார்ச் 2016 தூது-3




## தென் இந்தியத் திருச்சபை
## தமிழ் சபை - துபாய்

Private Circulation only

# தென் இந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 05 |
| உதவி போதகர் மடல் | 07 |
| உதவி ஆயரம்மா மடல் | 09 |
| செயலர் மடல் | 11 |
| கண்ணீர் கண்ணில் செங்நீர் சிலுவையில் ! | 14 |
| நீங்கள் கிறிஸ்தவரா... | 15 |
| கோழி – சேவல் | 16 |
| தெரிந்த சத்தியம் தெரியாத உண்மை | 18 |
| திருச்சபை ஜெபநாள் | 20 |
| பெண்கள் ஐக்கியச் சங்க அறிக்கை | 22 |
| The women to dress modestly ….. | 24 |
| Great Women of the Bible | 25 |
| தெரிந்து கொள்வோம் | 26 |
| வேதவினா போட்டி | 28 |
| Health Tips | 30 |
| Children's Corner | 32 |
| The Meadow | 33 |
| Birthday Celebrants | 34 |
| Wedding Anniversary Celebrants | 36 |
| ஆராதனை பாடல்கள் | 37 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2824696, Fax: 04-2826162, Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com, E-mail: csitapar@emirates.net.ae

# சபை போதகர் மடல்

**“கர்த்தாவே உமது மரணத்தை நினைவு கூருகிறோம்.
உமது உயிர்த்தெழுதலை அறிக்கையிடுகிறோம்.
நீர் திரும்பி வரக் காத்திருக்கிறோம்”**

கிறிஸ்துவுக்குள் எனதருமை உடன் விசுவாசிகளே,

மார்ச் மாதத்தின் நல் வாழ்த்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். Mars என்னப்படும் ரோமர்களின் சூரியக்கடவுளின் பெயரிலேயே இம்மாதம் அழைக்கப்படுகிறது. சூரியனின் கதிர்கள் பூமியின்மீது படும்போது இலையுதிர், குளிர் காலங்கள் முடிந்து கோடைகாலம் துவங்குவதால் மரங்கள், செடிகொடிகளில் இலைகள், தளிர்கள், பூக்கள் துளிர்க்க ஆரம்பிக்கின்றன. ஆகவே, இது வசந்த காலத் துவக்கமாக விளங்குகிறது.

மார்ச் மாதத்தில் “நீதியின் சூரியனாகிய இயேசு பெருமானின்” பாடு, மரணம் மற்றும் உயிர்ப்பு போன்றவைகள் வரலாற்று நிகழ்வுகளாக மட்டுமல்ல, விசுவாசத்தின் அடித்தளமாகவும் நினைவுகூரப்படும் தபசு காலங்கள் (அ) லெந்து காலங்கள் கொண்டாடப்படுகின்றன. திருக்குமாரன் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றி நாமும் இறைவனுடைய சித்தத்தை பிறர் வாழ்வுபெற நிறைவேற்றும் அர்ப்பணிப்பிற்கு அழைக்கப்படுகிறோம். இம்மாதம் 8-ம் நாள் (மார்ச் 8) அகில உலக ஜெப நாளாக (World Day of Prayer) மற்றும் உலகப் பெண்கள் தினமாக (International Day of Women) விளங்குகிறது. ஆகவே, குடும்பங்களின், திருச்சபையின், சமுதாயத்தின் முதுகெலும்பாய், தொடர்வாழ்வாய், படைப்புகளாய் விளங்கும் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளை மதிக்கவும், சமத்துவ உரிமை அளிக்கவும், இணையாய்க் கனப்படுத்தவும், பராமரிக்கவும், இசைந்து வாழவும் மானுடம் அழைக்கப்படுகிறது.

### தளிர்க்கும் தவக்காலம் (Blossoming Lent)

கிறிஸ்தவ திருச்சபை ஆண்டு நாட்காட்டியின்படி (Church Lectionary) வழிபாட்டிற்கான திருமறைச் சிந்தனைகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதல் பருவம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வரலாற்று பிறப்பு, வளர்ப்பு, வாழ்வு, செயல்பாடுகள், பாடு, மரணம், உயிர்ப்பு மற்றும் பரமேறுதல் வரையுள்ள “கிறிஸ்துவின் வரலாற்று” (History of Christ) நிகழ்வுகளை நினைவுகூரும் காலமாகும். இது வருகையின் காலங்களிலிருந்து துவங்கி திரித்துவத்திருநாள் வரையுள்ள காலமாகும். (From Advent to Trinity Sunday).

இரண்டாவது பருவம் திருச்சபையின் வரலாற்றை வெளிப்படுத்தும் காலமாகும். (Second half is the period of the life and growth of the Christian Church). இது பெந்தெகோஸ்தே திருநாளிலிருந்து வருகைக்கு முந்தைய காலம் வரை அமைந்துள்ளது (From the season of Pentecost to the day before Advent). இதில் இப்பொழுது நாம் முதல் பருவத்தின் இரண்டாம் காலமான கிறிஸ்துவின் பாடு, மரணம், உயிர்ப்பை நினைவுகூரும் தபசு காலங்களில் நுழைந்திருக்கிறோம். மரம், செடி, கொடிகளில் மட்டுமல்ல, நம் விசுவாச வாழ்விலே பாவ சுயநல வாழ்வின் தீமைகளைக் களைந்து புதிய வாழ்வில், பிறர்நல வாழ்வில் இயேசுவைப் பின்பற்றிச் செல்ல அழைக்கப்படுகிறோம்.

## வரலாற்றின் தவக்காலம் (Historical Lent)

வரலாற்றை கி.மு. (கிறிஸ்துவுக்கு முன்) என்றும் கி.பி. (கிறிஸ்துவுக்கு பின்) என்றும் இரண்டாகப் பிரித்த இயேசு கிறிஸ்து ஆண்டவரின் பிறப்பு, வாழ்வு, பாடு, மரணம், உயிர்ப்பு, வரலாற்றில் நிருபிக்கப்பட்ட இறையவதாரமாகவும், இறைமீட்பாகவும், புது மானுடமாகவும் அமைந்துள்ளது. அவர் வழியே உருவான திருக்கூட்டமான திருச்சபையை தொடர்ந்து வலுப்படுத்திய திருத்தூதர்களுடன் இணைந்து 120 பற்றுமையாளர்களும், திருமுழுக்கின்வழியே இணைந்த 3000 விசுவாசிகளும் கிறிஸ்துவின் நற்செய்தியை எங்கும் விரிவுபடுத்தினர். அதன் அடிப்படையில் யூதர்-கிரேக்கர், அடிமை-உரிமைக்குடி மக்கள், ஆண்-பெண் என்ற ஏற்றத்தாழ்வின்றி (கலா. 3:28) சமத்துவ சமுதாயமாக, இறையரசின் முன்சுவையாக திருச்சபை வளர்ந்தது. (Early Church is the symbol of Liberty-Equality and fraternity) முதலில் ஈஸ்டர் திருநாளை மட்டும் நினைவுகூர்ந்த ஆதித்திருச்சபை மக்கள் தவக்காலங்களை 40 நாட்களாக நீட்டித்தனர். (40 ஆண்டு பாலை நிலப்பயணம், 40 நாட்கள் சோதனைப் போன்று). இந்நாட்களில் மக்கள் தம் பக்தியை வெளிப்படுத்தவும், இறைவருகைக்காகக் காத்திருக்கவும், இறைவேண்டல் (Prayer) உண்ணா நோன்பு (Fasting) மற்றும் எளியவருக்கு தான, தருமம் (Alms giving) ஆகிய மூன்று ஆன்மீகக் கடமைகளில் அதிகம் ஈடுபட்டனர்.

## மாற்றுருவாக்கத்தின் தவக்காலம் (Transforming Lent)

சாம்பற்புதன்கிழமையிலிருந்து லெந்து அல்லது தபசுகாலம் துவங்குகிறது. இது நிசான் மாதத்தின் 14ம் நாளின் பஸ்காவிற்கு முந்தைய 40 நாட்கள் (ஞாயிற்றுக்கிழமைகள் நீங்கலாக-ஆண்டவர் உயிர்ப்பின் நினைவுகூரும் நாட்கள் என்பதால்) என்று கணக்கிடப்பட்டு புதன் கிழமையிலிருந்து துவங்குகிறது. இது சாம்பற்புதன் (Ash Wednesday) என்று அழைக்கப்பட பல காரணங்கள் உள்ளன. ரோம சபைகளில் கடந்த ஆண்டு குருத்தோலைகள் சாம்பலாக்கப்பட்டு, அதை திருநீறுபோல அணிந்து மக்கள் அடுத்த ஆண்டின் சாம்பற்புதன்கிழமை வழிபாட்டில் பங்குபெறுவர்.

இச்சாம்பல் மனந்திரும்புதலையும் (Repentence) அதாவது இரட்டுடுத்தி சாம்பலில் உட்காருதலையும், மண்ணிலிருந்து, சாம்பலிலிருந்து, புழுதியிலிருந்து வந்த மனிதன் அதே மண்ணுக்கு, சாம்பலுக்கு, புழுதிக்குத் திரும்பவேண்டும். (We are from the dust and must get back to dust) என்ற புவிவாழ்வின் நிலையாமையையும், கிறிஸ்துவின் தியாகமான பாடுகளையும் (vicarious sufferings of Christ) நினைப்பூட்டுகிறது. கிறிஸ்துவைப்போல நாமும் இறைசித்தம் நிறைவேற்றி, சிறியோருக்காய், பிறருக்காய் வாழவும், தியாகம் செய்யவும், அறைகூவல் விடுக்கும் காலமே தவக்காலமாகும். இதன் கடைசி வாரமாகக் (Holy week) கருதப்பட்டு கிறிஸ்துவின் வெற்றிப்பவனி, கடைசி நாட்களின் நிகழ்வுகள், கடைசி திருவிருந்து, வாழ்வை வளப்படுத்தும் ஏழு புனித வார்த்தைகளை நினைவுக்கூரும் புனித வெள்ளி, மற்றும் உயிர்ப்புத் திருநாள் (Easter) நினைவுகூரப்பட்டு, கிறிஸ்துவைப்போல இறைமக்களாகவும், மனுமக்களாகவும் நாம் செய்யவேண்டிய செயல்களையும், வாழவேண்டிய வாழ்வின் அர்த்தத்தையும் நினைப்பூட்டுகிறது.

**"கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்,
ஆயினும், பிழைத்திருக்கிறேன், இனி நானல்ல,
கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்". (கலாத்தியர் 2:20).**
அறிக்கையிட்டு, அதன்படி வாழ்வோமா?! ஆமென்

இறைப்பணியில் ஆயர்
அருள்திரு.S.கிறிஸ்தோபர் ரத்தினசாமி.

## NEW ARRIVALS

"பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"

Praisy Natania
D/o.Mr.Kasi Rajan & Mrs.Grace Anitha
29-01-2016

Jedidia Anish
D/o.Mr.Anish R & Mrs.Abitha Selva Rani Anish
30-01-2016

Ryan David Christoson
S/o.Mr.Andrew Christoson & Mrs.Vidya David Andrew
12-02-2016

Dvorah Gem Katie
D/o.Mr.John Isravel & Mrs.Gem Nisha
18-02-2016

# ஆயரம்மா மடல்

பெண் என்னும் பெரும் படைப்பு

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே,

அகில உலக பெண்கள் தின நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். கடவுளின் படைப்பில் அழகான படைப்பு பெண்ணானவள் கடவுளின் சாயல், இணையான சாயல், முழுமையான சாயல், ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள். பெண்கள் தினத்தைக் கொண்டாடும் மாதம் இது. இந்த மாதத்தில் பெண்களின் மகத்துவங்களைப் புரிந்து கொள்ளவும், அவர்களின் தலைமைத்துவத்தை அறிந்து கொள்ளவும், அவர்களுக்கு ஆண்டவர் கொடுத்த தாலந்துகளையும், திறமைகளையும் உணர்ந்து புரிந்துகொள்ள முயற்சிப்போம். பெண் என்றாலே இரண்டாம் நிலையாகக் கருதுபவர்களுக்கும், பெண்ணை இணையான படைப்பாகப் புரிந்து கொள்ளாத எந்த நபருக்கும் கடவுள் கூறுவது "கடவுள் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைச் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார், ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்". (ஆதி. 1:27). ஆகக் கடவுள் உண்மையுள்ளவராயிருக்கிறார், இணைந்து படைத்திருக்கிறார். உலகமுழுவதிலுமுள்ள பெண்களையும், பெண் பிள்ளைகளையும் என்றும் உற்சாகப்படுத்தவும், ஊக்கப்படுத்தவும், புரிந்துகொள்ளவும், கனப்படுத்தவும், சமமாக நினைக்கவும் இந்த மார்ச் மாதம் 8ம் நாள் பெண்கள் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

முதன்முதலில் ஜெர்மானிய தேசத்தில் 1914-ஆம் ஆண்டு மார்ச் 8ம் நாளில் ஆண்களுக்குரிய எல்லா உரிமையும், விடுதலையும், கௌரவமும், பெண்களுக்கும் இணையாக வழங்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் பெண்களுக்குரிய குடியுரிமைகள் (Civil Rights) வழங்கப்பட போராடும் அமைப்பாக உருவாக்கப்பட்டதே இந்த அமைப்பாகும். பெண்களைத் தாயாகவும், சகோதரியாகவும், உற்ற துணையாகவும், ஏற்ற உதவியாகவும், உடன் குடியாகவும், மதிப்புடனும், அன்புடனும் ஆண்கள் பார்க்க திருச்சபையின் வழியாக இந்த பெண்கள் அமைப்பு வலியுறுத்தியது. ஆகவே, மார்ச் 8ம் நாளை பால் உறவு ஆதிக்கத்திற்கு எதிரான நாள் (Anti Sexism Day) எனவும், குடியுரிமை விழிப்புணர்வு நாள் (Civil Awarness Day) எனவும், ஒடுக்குதலுக்கு எதிரான நாள் (Anti-Discrimination Day) எனவும், பாலியல் பலாத்காரத்திற்கு எதிரான நாள் (Anti-Rapism Day) எனவும், பெண் மற்றும் சிறுமியர் நாள் (Women and Girls Day) எனவும், உலக அமைப்புகளும், திருச்சபைகளும் கொண்டாடி வருகின்றன. முதல் உலகப்போரின்போது சமாதானத்திற்காகவும், சமத்துவத்திற்காகவும் துவக்கப்பட்ட மக்கள் இயக்கமே (People's Movement) அகில உலக பெண்கள் தினமாக உருவெடுத்தது.

முழு விடுதலை மற்றும் சமஉரிமை வாழ்வின் புத்தகமான திருமறையில் பெண்கள் எத்தனை சிறப்புடையவர்களாய், மதிப்புடையவர்களாய், சவால்களையும், ஆபத்துகளையும், சந்தித்து மேற்கொண்ட இறையடியவர்களாய், தலைவிகளாய் விளங்கினார்கள் என்பதைக் கீழ்க்கண்ட பல எடுத்துக்காட்டுகள் மூலம் அறியலாம்.

1. ஜீவனுள்ளோர்களுக்கெல்லாம் தாயான ஏவாள் (ஆதி. 3:20)
2. எபிரெய ஆண் தலைமுறைகளைக் காப்பாற்றின தைரியமான எபிரெய மருத்துவச்சிகள் சிப்போராள், பூவாள் (யாத்தி. 1:15-21)
3. முழு இஸ்ரவேலையும் வீரத்தலைவியாய் வழிநடத்திய தெபொராள் (நியாயா. 4:5)
4. அந்நிய தேசத்திலும் தம் மக்களை அழிவிலிருந்து விடுவித்த அற்புத அரசி எஸ்தர் (எஸ்தர் புத்தகம்)
5. மீட்பரையே உலகிற்கு அளித்த தியாகத்தாய் மரியாள் (மத். 1,2)
6. இயேசுவின் ஊழியங்களுக்கே உதவி செய்த பெருமைக்குரிய பெண்கள்: குணமாக்கப்பட்ட சில பெண்களும், மகதலேனா மரியாளும், யோவன்னாளும், சூசன்னாளும், தங்கள் ஆஸ்திகளால் இயேசுவுக்கு ஊழியம் செய்த அநேக பெண்களும் (லூக்கா 8:2,3)
7. இயேசுவையே அபிஷேகம் பண்ணி அவரது உயிர்தெழுதலை முதன்முதலில் கண்ட மகதலேனா மரியாள் (யோவான் 20:1-18)
8. ஆபிரகாமின் குமாரருக்கு இணையாக ஆபிரகாமின் குமாரத்தி என்று சான்று பெற்ற நிமிரமுடியாதிருந்து நிமிர்த்தப்பட்ட பெண் (லூக்கா 13:11-13)
9. இயேசுவை எப்பொழுதும் முகம்கோணாமல் உபசரித்த பெத்தானியாவின் மார்த்தாள், மரியாள் (யோவான் 11)
10. பெரிய விசுவாசம் கொண்டவள் என்று ஆண்டவரால் அங்கீகரிக்கப்பட்ட கானானியத்தாய் (மத். 15:21-28)
11. ஆண்கள் அனைவரும் பயந்திருந்த போது தைரியமாய் இயேசுவின் கல்லறைக்கு சென்ற வீர மங்கைகள் மகதலேனா மரியாளும், யோவன்னாளும், யாக்கோபின் தாய் மரியாள், மற்ற பெண்களும் (லூக்கா 24)
12. ஆதித் திருச்சபையில் உதவிக்காரரோடு இணையாக உதவிக்காரிகளாய் திருப்பணி செய்த பெண்களான பெபேயாள் (ரோம.16:1,2), பிரிஸ்கில்லா (அப். 18:18)
13. விடுவிக்கப்பட்ட பேதுருவை முதலில் கண்டு அறிவித்த ரோதை (அப். 12:11-16)
14. யோப்பா பட்டணத்து விசுவாசத்தலைவி தொற்காள் என்னும் தபீத்தாள் (அப். 9:36-43)
15. ஊழியர்களையும், ஊழியங்களையும் ஜெபத்தால் தாங்கி நடத்திய லீதியாள் (அப். 16: 12-15, 40)

இவைகள் போதுமா இன்னும் வேண்டுமா என்று கேட்குமளவிற்கு திருமறையில் பெண்களின் பங்களிப்பு எத்தனை சிறப்பானது! இன்றும் அவைகளைச் செய்து வரும் இறைவனால் இணைச்சாயலாக படைக்கப்பட்டுள்ள பெண்களை மதிப்போம்! போற்றுவோம்!! பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளின் மாண்பு காப்போம்!!!

திருமதி. தீபா கிறிஸ்தோபர்.

ஆயரம்மா, பெண்கள் ஐக்கிய சங்கத் தலைவி.

வாக்குத்தத்தங்களை நினைவுபடுத்தி நம்மை ஆசீர்வதிக்கிற கடவுளின் திருப்பெயரால் அனைவரையும் அன்புடன் வாழ்த்துகிறேன். இம்மாதம் முழுவதும் கடவுளின் அருளும், ஆசியும் உங்களுடனிருப்பதாக.

## திருமறை ஆய்வு - ரோமர் 15-ம் அதிகாரம்

**“ஒவ்வொருவனும் பிறனுடைய பக்திவிருத்திக்கேதுவான நன்மை யுண்டாகும்படி அவனுக்குப் பிரியமாய் நடக்கக்கடவன்” (ரோமர் 15:2)**

ரோம அரசு மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசு அல்ல. அது சர்வாதிகாரமும், இனவெறியும், கொண்ட பேரரசாகத் திகழ்ந்தபடியால், பெரும்பான்மையான மக்கள் அரசை வெறுத்தனர். கிறிஸ்தவர்களையும், அடிமைகளையும், தாழ்நிலை மக்களையும் கொடுமையாகவும், அநீதியுடனும் ஆட்சி செய்தனர். அப். பவுலின் காலத்தில் கிறிஸ்தவர்கள் அரசாங்கத்திற்காக ஜெபிப்பது, வரிகள் செலுத்துவது, அரசாணைகளை மதித்து நடப்பது போன்றவற்றைக் கடைபிடித்தனர். மூன்று நூற்றாண்டுகளாக, எல்லாச் சட்டத் திட்டங்களுக்கும் கீழ்ப்படியாவிட்டாலும், அரசரையும், அரசையும் கனம்பண்ண வேண்டுமென்று கிறிஸ்தவர்களுக்குக் கற்பிக்கப்பட்டது. அரசுக்கு எதிராகக் கலகம் பண்ணவோ, புரட்சி செய்யவோக் கூடாது என்றும் போதித்து வந்தனர்.

இத்தகைய பின்னணியத்தில் வாழ்ந்து வந்த ரோமாபுரிக் கிறிஸ்தவர்களைக் கடவுளின் பெயரால் இவ்வதிகாரத்தில் 3 முறை வாழ்த்துகிறார். இம்மூன்று வாழ்த்துக்களும் அப். பவுலின் அன்புக் கட்டளையுடன் இணைந்திருப்பது பொருள் நிறைந்ததாய் இருக்கிறது.

1. பொறுமையையும், ஆறுதலையும் அளிக்கும் தேவன் கிறிஸ்து இயேசுவினுடைய மாதிரியின்படியே நீங்கள் ஏகசிந்தையுள்ளவர்களாய் இருக்கும்படி உங்களுக்கு அநுக்கிரகஞ்செய்வாராக.

ரோமர் 15:6-ல் இவ்வாழ்த்தினைப் பதிவு செய்திருக்கும் அப். பவுல், “ஒருமனதுடன் கடவுளை மகிமைப்படுத்துங்கள்” என்ற அறைகூவலை ரோமக் கிறிஸ்தவர்களுக்குக் கூறுகிறார். இனத்தின் பெயரால், இடத்தின் பெயரால் கொள்கை, கோட்பாடுகள், சட்டத்திட்டங்கள் மற்றும் தொழில் அடிப்படையில் இன்றும் சபைகளுக்குள் இருக்கும் வேறுபாடுகளைப் போல, அன்றும் யூதர்கள், யூதரல்லாதவர்கள், யூதமார்க்கத் தமைந்தவர்கள், பிற இனத்தவர் என பல பிரிவுகள் வழக்கத்திலிருந்ததைக் கண்டு, மன வேதனைக் கொண்டவராய் கடவுள் மகிமைப்பட, அவரை மகிமைப்படுத்த “ஒருமனம் அவசியம்” என்பதனை அழுத்தமாய்

குறிப்பிடுகிறார். பிரிவினை எண்ணத்தோடு செயல்படும் ஒவ்வொருவரும் மனந்திரும்பும் ஒவ்வொரு முறையும் தெய்வீகத்தின் வெளிப்பாடு உண்டாவதால் அது தேவனுக்கு மகிமையைக் கொண்டு வருகிறது.

## 2. நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் நிரப்புவாராக. (15:13)

"ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள்" என்னும் அன்புக்கட்டளையை, இவ்வாழ்த்தினை சொந்தம் கொண்டாடும் ஒவ்வொருவரும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது அப். பவுலின் ஆசை. பலமுள்ளவர்கள் என்றுத் தங்களைக் கருதும் விசுவாசவீட்டார், பலவீனர்களாக கருதப்படுவோரை ஏற்றுக்கொள்ள வேண்டும். பக்தி மிகுந்தவர்கள் என்றுத் தங்களை நினைப்போரும், பக்தியில் குறைவுடையோரை அங்கீகரிக்க வேண்டும். ஒழுங்கு முறைகளைப் பின்பற்றுவோர் இவற்றை அறியாமல் இருப்போரையும் ஏற்க வேண்டும். அன்போடும், பொறுமையோடும், பக்திவிருத்தியை, ஊக்கம் தரும் வார்த்தைகளை ஊட்டப் போதுமானோர் இல்லாததால் இன்று எத்தனைப் பின்மாற்றக்காரர்கள்? விசுவாசத்தில் வலுவற்ற சீடர்களைத் திடப்படுத்தி அநேக ஆயிரங்களுக்கு ஆசீர்வாதமாக்குவதில் கவனம் கொண்ட இயேசு கிறிஸ்து, தமக்கே பிரியமாய் நடவாமல், நம்மை ஏற்றுக்கொண்டது போல நாமும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

## 3. சமாதானத்தின் தேவன் உங்களனைவரோடுங்கூட இருப்பாராக (15:33)

இம்மூன்றாம் வாழ்த்துதலோடு அப். பவுல் தரும் அன்புக்கட்டளை "ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்" என்பதே. இவ்வதிகாரம் 14-32 வரை தனது நற்செய்திப் பணியை நினைவுகூர்வதோடு, இப்பணியை சபையார் தொடர்ந்து செய்ய ஆலோசனை வழங்குகிறார். "பிற இனத்தவர்களுக்குத் திருப்பணி செய்யும் ஆசாரியன்" எனத் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும் பவுலடியார் 18, 20, 21 ஆகிய வசனங்களில் "அறியாதவர்களுக்கு, அறிவிக்கப்படாத இடங்களுக்கு நற்செய்தியை அறிவிப்பதே" எனது விருப்பம் எனத் தன்னையே உதாரணமாக்குகிறார். கவலையிலிருப்போருக்கு ஆறுதலையும், தேவையிலிருப்போருக்கு தரம் உயர ஆலோசனை வழங்குவதையும், தவறு செய்வோர் திருந்த உபதேசம் செய்வதையும் மட்டுமே புத்தி சொல்வதாகக் கருதாமல், இச்சூழல்களில் நற்செய்தியை அறிவிப்பதைக் கடமையாகக் கொள்வதும் அவசியமாகும்.

பிரியமானோரே, அப். பவுலின் அன்புக் கட்டளைகள் மூன்றையும் கையாண்டு கடவுளின் திருப்பெயரால் அறிவிக்கப்பட்டுள்ள வாழ்த்துக்களை சொந்தமாக்குவோம்.

இறைப்பணியில் உங்களுடன்,

அருட்திரு. V. சாமுவேல் ஜெபராஜ்.

# உதவி ஆயரம்மா மடல்

உறங்காமலும், தூங்காமலும் நம்மை அனுதினமும் காக்கின்ற உன்னதரின் திருப்பெயரில் "தூதன்" வாசகர்கள் அனைவருக்கும் மனம் நிறைந்த வணக்கம்.

**சிந்தனைக்கு ஓர் சிறுகதை**

அறுபது வயது ஆலமரம்.
விழுதுகளை விட்டு உயரமாய் வளர்ந்திருந்தது.
பக்கவாட்டிலும் பரந்து விரிந்த வளர்ச்சி.
அதன் அடியில்...
பெரிய மரமாகவேண்டிய சின்னச் சின்னச் செடிகள் ஆலமரத்தின் நிழலை மனமுவந்து வாழ்த்தின.

எவ்வளவு பெரிய மரம்.....!
இந்த மரமின்றி எங்களுக்கு நல்ல வாழ்வு இல்லை.
இம்மரமே எங்களுக்கு முன்மாதிரி.
எவ்வளவு சுகமான வாழ்வு இது.

பெரியவர் ஒருவர் வந்தார்.
கொழு கொழுவென வளர்ந்திருந்த சின்னச் சின்னச் செடி மரங்களைப் பார்த்தார். மனமிரங்கினார். தள தளவென்ற இந்த வளர்ச்சி ஆரோக்கியமானதல்ல. பிடுங்கி வேறொரு இடத்தில் நட்டு வளர்க்க முயன்றார்.

அலறின அறிவுகெட்ட சின்ன மரங்கள்:
ஐயோ...! எங்களைப் பிடுங்காதீர்கள். இந்த ஆலமர நிழலின்றி வேறு வாழ்வை எங்களால் யோசித்துக்கூடப் பார்க்க முடியாது. வேறு இடத்தில் இப்படி கொழு கொழுவென வளரமுடியுமா? நாங்கள் நிழலுக்கு எங்கேப் போவோம்?

பெரியவர் சொன்னார்:
இந்த ஆலமரம் இல்லையென்றால் உங்களுக்கு நிழல் கிடைக்காமல் போகலாம். ஆனால்... சூரிய ஒளி கிடைக்குமே... சூரிய ஒளி இல்லாமல் தான் நீங்கள் இப்படி கொழு கொழுவென்று இருக்கிறீர்கள். இப்படியே போனால் உங்களால் வளர்ந்து கனிதர முடியாது.

சின்னச் சின்னக் செடி மரங்களே.....!
நிழல் தரவேண்டிய நீங்கள் நிழலுக்கு அலையலாமா?"

புரிந்துகொண்டச் செடிமரங்கள் அறிவுரை கேட்டு நின்றன:
"நாங்களும் தனியொரு பெரிய மரமாய் உருவாக என்ன செய்ய வேண்டும், பெரியவரே....?
"சொல்கிறேன் கேளுங்கள்". பெரியவர் தொடர்ந்தார்:

ஒருநாள் அதிகாலை கண்விழித்த போது... உலகமே மஞ்சள் நிறத்திற்கு மாறிப் போயிருந்தது. மனிதர்கள், விலங்குகள், பறவைகள், பொருட்கள் எல்லாமே மஞ்சள் நிறமானது - பச்சோந்தி உட்பட.

ஆனால்... ஒரே ஒரு பஞ்சவர்ணக்கிளி மட்டும் தன் நிறத்தை மாற்றிக் கொள்ளவில்லை. ஊரே அதைப் பார்த்து அதிசயித்தது.
கிளி இருந்த இடம் சுற்றுலாத்தலமானது.
பார்வைக் கட்டணம் வசூலிக்கப்பட்டது.
பயணிகள் பலர் சாரை சாரையாய்ப் பார்க்க வந்தனர்.
ஊடகங்களெல்லாம் அதையே அனுதின செய்தியாக்கின.
இரகசியமாய் சிலர் அதிசயக் கிளியை கடத்திச் செல்ல திட்டமிட்டனர்.
தகவல் கிடைத்ததும், ஆயுதம் ஏந்திய போலீஸ் பாதுகாப்புப் போடப்பட்டது.

சில வாரங்களுக்குப் பின், ஒரு நாள் அதிகாலை...
உலகமே சிவப்பு நிறத்திற்கு மாறிப்போனது.
எங்கு பார்த்தாலும் சிவப்பு - பச்சோந்தி உட்பட.
ஆனால்...
அந்த பஞ்சவர்ணக்கிளி மட்டுமே தன் நிறத்தை மாற்றிக் கொள்ளவேயில்லை.
அதற்கு இன்னும் மவுசு கூடியது.
பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.
மறுபடியும், உலகம் இயல்பான நிறத்திற்கு தாவியது.
எல்லாமே இயல்பான நிறத்திலிருந்தன.
இப்போதும்....
கிளி தன் இயல்பான நிறத்திலேயே இருந்தது.
அனைவரும் இதன் தனித்தன்மையை இன்னும் மெச்சிக்கொண்டனர்.
"நிறம் மாறாத கிளி" என்று... கடைசியாய்ச் சொன்னார்:

> பரந்து வளர்ந்த ஆலமரத்தடியில்...
> எந்த மரமும் செழித்து வளரமுடியாது.
> அப்படி ஒருவேளை வளர்ந்தால்கூட
> அது ஒட்டுண்ணியும் சாருண்ணியுமாகத்தான் இருக்கும்.

எனவே செடி மரங்களே...
சுயசார்பு கொள்ளுங்கள், தனித்துவத்தை இழக்காதிருங்கள். நீங்களும் தனியொரு பெரிய மரமாய் உருவாகலாம்.

"கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்". (கலாத்தியர் 5:24).

உங்களுக்காக ஜெபிக்கும்,
திருமதி. செலின் சாமுவேல்.

# செயலர் மடல்

கர்த்தருடைய பெரிதான கிருபையால் 2016-ம் ஆண்டின் 2 மாதங்களை ஆசீர்வாதமாக்கிக் கொடுத்து, மூன்றாம் மாதத்திற்குள் நுழைய கிருபை செய்த தேவனுக்கு நன்றிகளை செலுத்திக் கொள்கின்றேன்.

Young couples retreat 12-02-2016 அன்று மிகவும் சிறப்பாக நடந்தது. சுமார் 35 couples கலந்து கொண்டார்கள். மிகவும் உற்சாகத்துடன் சிறப்பான முறையில் வழிநடத்திய ஆயர் அவர்களுக்கு நன்றி. இளம் தம்பதியர்கள் இப்படிப்பட்ட கூடுகையில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கின்றேன். E1,E2,E3,E4 hall Refurbishment -க்காக மூடப்படுகிறது. ஆகையால் Junior Church மற்றும் VBS நடத்த மிகவும் நெருக்கப்பட்டுள்ளோம். ஆகையால் சபையார் ஊக்கமாக ஜெபிக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

22-2-2016 அன்று Committee Meeting நடந்தது. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கடலூர் மாவட்டத்தில் 25 வீடுகளை 6.25 லட்சம் ரூபாய்க்கு reconstruction செய்துகொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. Kavalur Mission Field-க்காக Junior Church காணிக்கை மூலமாக 6.8 லட்சம் ரூபாய் செலவில் மகளிர் விடுதிக்கு கழிப்பறையும், Warden Room reconstruction செய்துகொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. Vellor பகுதியில் இருப்பவர்கள் மற்றும் சென்னையைச் சேர்ந்தவர்கள் விடுமுறைக்குச் செல்லும்போது Committee-யிடம் தெரிவிக்கவும். நீங்கள் நேரில் போய் பார்வையிடவும் உங்களை ஈடுபடுத்திக்கொள்ளவும் உதவியாக இருக்கும்.

நமது ஆலயத்தின் ஒரு Prayer Cell தாங்கள் இந்தியாவில் CSI Tamil Parish Dubai சபை மூலமாக ஓர் ஆலயம் கட்ட பணம் சேகரித்து வைத்துள்ளார்கள் என்று சபை கமிட்டியிடம் அறிவித்துள்ளார்கள்.அதன்படி அவர்கள் தரும் பணத்தில் இந்தியாவில் ஒரு ஆலயம் கட்ட கமிட்டியும் approve பண்ணியுள்ளது.நமது மேற்பார்வையில் அந்த ஆலயம் கட்டித் தரப்படும். இப்படியாக மற்ற Prayer Cell மூலமாக இந்தியாவில் ஆலயம் கட்ட தாமாகவே முன்வந்து பணம் கொடுக்கப்படுமானால், இந்தியாவில் ஆலயம் கட்டித்தர முடிவு பண்ணியுள்ளோம். விருப்பம் உள்ளவர்கள் மற்றும் கர்த்தரால் ஏவப்பட்டவர்கள் Prayer Cell Leaders மூலமாகக் கொடுக்கலாம்.

26-2-2016 அன்று நம் மத்தியில் வந்து செய்தி கொடுத்த தற்போதைய CSI Parish Dubai - Central Kerala Diocease Vicar Rev.Praveen அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

Subscription, ஏல பாக்கி மற்றும் வேறு எந்த பாக்கி இருக்குமானால் அதை 31-03-2016 முன்பாகச் செலுத்தி ஊழியங்களைத் தாங்குங்கள். 31-03-2016-க்கு முன் செலுத்தத் தவறிய பட்சத்தில் அவர்களின் பெயர்கள் நமது சட்டதிட்டத்தின்படி Voters list-ல் வரத் தகுதி பெறாது.

சிங் ரத்னம், செயலர்.

## வருந்துகிறோம்

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"

நமது சபையைச் சேர்ந்த

Mr. G.Asirvatham அவர்களின் தாயார்
Mrs.Mary Chellathai அவர்கள் கடந்த 03–02–2016 அன்றும

Mrs. Josephine Persis Wesley Paul அவர்களின் தகப்பனார்
Mr. Vetha Muthu அவர்கள் கடந்த 07–02–2016 அன்றும்

Mrs. Priya Steeve அவர்களின் தகப்பனார்
Mr. Joel Singh அவர்கள் கடந்த 12–02–2016 அன்றும்

Mrs. Deepa Jayaprakash அவர்களின் தகப்பனார்
Mr. Jebamani அவர்கள் கடந்த 12–02–2016 அன்றும்

Mr. Inbakumar அவர்களின் தகப்பனார்
Mr. Ramasamy அவர்கள் கடந்த 13–02–2016 அன்றும்

Mrs. Sharon Naseem அவர்களின் கணவர்
Mr. Naseem அவர்கள் கடந்த 16–02–2016 அன்றும்

Mrs. Jeraldlin Glenis Sam Kingston அவர்களின் தகப்பனார்
Mr. Jerald அவர்கள் கடந்த 27–02–2016 அன்றும்

கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்கள்.

# NEW MEMBERS LIST

| Sl.No. | Name | Mem.No. | Area |
|---|---|---|---|
| 1 | Mr. C.Britto Vethamani | 2585 | Dubai |
| 2 | Mr. J.Selin Selva Kumar | 2586 | Dubai |
| 3 | Mrs. Beena R | 2587 | Dubai |
| 4 | Dr. Micheal Thomas | 2588 | Dubai |
| 5 | Mr. Pebsin Gino J | 2589 | Dubai |
| 6 | Mr. Selvin Kumar Balan | 2590 | Dubai |
| 7 | Mr. Jepa Kumar C.S | 2591 | Dubai |
| 8 | Mr. Vipin Noyal Singh | 2592 | Dubai |
| 9 | Mr. R.Bosc | 2593 | Dubai |
| 10 | Mr. Ruban Thangaraj | 2594 | Dubai |
| 11 | Mr. J.Jacobraj | 2595 | Dubai |
| 12 | Mr. Silvan Rajan | 2596 | Dubai |
| 13 | Mr. S.Paulmani | 2597 | Fujairah |
| 14 | Mr. T.Arun Kumar | 2598 | Fujairah |
| 15 | Mr. I.David Pon Sekar | 2599 | Fujairah |
| 16 | Mr. S.Nivin John | 2600 | Fujairah |
| 17 | Mr. George Rathinasamy | 2601 | Fujairah |
| 18 | Mr. Prakash Peter P | 2602 | Fujairah |
| 19 | Mr. Jino Aswin | 2603 | Fujairah |
| 20 | Mr. Ebi Paul Raj | 2604 | RAK |
| 21 | Mr. Ujinraj Kanagaraj | 2605 | RAK |
| 22 | Mr. K.Robinson | 2606 | RAK |
| 23 | Mr. D.Selva Nayagam | 2607 | RAK |
| 24 | Mr. Inbanathan Esak | 2608 | RAK |
| 25 | Mr. Paul Stephen | 2609 | RAK |
| 26 | Mr. S.Deva Arul | 2610 | RAK |
| 27 | Mr. P.Ravidas | 2611 | RAK |
| 28 | Mr. Merbin Moni | 2612 | RAK |
| 29 | Mr. Jayachandra Packiamony | 2613 | RAK |
| 30 | Mr. Eban Yesudian Nayagam | 2614 | RAK |
| 31 | Mr. R.Vijayan | 2615 | RAK |
| 32 | Mr. Vincent Jayapal | 2616 | RAK |
| 33 | Mr. Arul J | 2617 | RAK |
| 34 | Mr. Suba Boss M | 2618 | RAK |
| 35 | Mr. Gladson Bini Kumar | 2619 | Fujairah |

# கண்ணீர் கண்ணில் செந்நீர் சிலுவையில் !

கிறிஸ்தவர் அல்லர்
கிறிஸ்துவே அவரானார்––இயேசுநேசர்
கற்றவர் அல்லர்
கற்றவரே போற்றுவோர்––இயேசுநேசர்
அறிந்தோர் அல்லர்
அறியவந்தார் அற்புதத்தால்––இயேசுநேசர்
தச்சர் மகனார்
உச்சப் புகழானார்––மரிமைந்தர்
துச்சம் தன்னுயிர்
பச்சம் மக்களுயிர்––மரிமைந்தர்
அச்சம் போக்குபவர்
மக்களை வாழவைக்கிறார்––மரிமைந்தர்
மண்ணில் பிறந்தவர்
விண்ணில் வாழ்பவர்––மனிதகுமாரர்
மண்ணையும் விண்ணையும்
பிணைத்துக் காப்பவர்––மனிதகுமாரர்
மண்ணை விண்ணில்
பரிந்துரைப்பவர் பரிகரிப்பவர்––மனிதகுமாரர்
வையப்பாவம் கையைக்கழுவும்
சொந்தரத்தம் தந்தஅபிமானி––தேடிவந்ததெய்வம்
கைமெய் வையாமல்
வார்த்தைஆயுத ஞானி––தேடிவந்ததெய்வம்
வையத்தில் தோற்றாலும்
வானுலகத்தில் பரணிபாடும்––தேடிவந்ததெய்வம்
முப்பத்தி மூன்றரை
ஊழியஆண்டுப் புவிவாழ்வில்––பரமவைத்தியர்
எப்போதும் மக்களுள்ளத்தில்
ஒப்பிலா உயர்வாழ்வில்––பரமவைத்தியர்
தப்பாமல் தயைசெய்
தாயுள்ளப் பரிதவிப்பில்––பரமவைத்தியர்
ஒற்றைப்படைப் போராளி
பெற்றஉறுதி இறுதிநாட்களில்––சிலுவைநேசர்
குற்றமற்றும் குற்றஞ்சுமந்தார்
நெஞ்சேநஞ்சான வஞ்சகர்முன்னால்––சிலுவைநேசர்
பற்றுக்கொண்டோர் ஏற்றுக்கொண்டார்
உபவாசர் கண்முன்னால்––சிலுவைநேசர் .

ஆதாரம் :
நற்செய்தி நூற்கள்
கவிதை எண் : 185
கவிதை ஆக்கம் :
மணிமுத்து

# நீங்கள் கிறிஸ்தவரா...

மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள், செய்தால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை. மத்தேயு 6:1

நிலத்திலும்
நீரிலும்
நீலவானிலும்
நிகழும்.. எந்த
அதிசயமும்
அற்புதமும்
கர்த்தர்
அறிந்ததே.
காரணங்களுக்கெல்லாம்
காரணமானவர்
போற்றுகின்ற
தோற்றுவாய்க்கெல்லாம்
மூலமானவர்
முழுமுதற் கடவுள்
கர்த்தர் ஒருவரே..
தர்மமும்
தானமும்
தவமும்
தயைகுணமும்
தாராள மனமும்
தவறிழைக்கா
ஒழுக்கமும்
தகை சான்ற
சொல்லும்
ஒருவரை
ஆன்மீக
ஆனந்தத்ததுக்கு
அழைத்துச் செல்லும்
வாருங்கள்
வசனத்துக்குள்
பிரவேசிப்போம்.
மனித சமூகம்
புகழவேண்டும்
வள்ளலென்று
வாழ்த்த
வேண்டுமென்று

மக்கள் மத்தியில்
எந்தவித தர்மம்
யாருக்கு செய்தாலும்
பலனில்லை - காண்க
பைபிள் தரும்
பாடம் பாருங்கள்
உன் வலது கை
செய்கிறதை
உன் இடது கை
அறியாதிருக்கக்
கடவது - நம்
பிதா
சதாகாலமும்
உணர்பவர்.
ஆடம்பரமும்
ஆரவாரமும்
நான் செய்தேன்...
என்ற
அகங்காரமும்
உன்னிடம்
உண்டெனில்
நான், நான்
என்பதை
மனதிலிருந்து
எடுத்து
குப்பையில் வீசு
கர்த்தரின்
கிருபையென பேசு
ஓடிவிடும் மாசு
நிம்மதியாகும் மனசு.
வாருங்கள்
நண்பரே
உபவாச காலமிது
உதவும் நேரமிது
பொருள் இருப்பவரே
இரக்கமானவரே

உபவாச
காலமென்றில்லாது
ஏன்
எல்லாக் காலமும்
உணவின்றி
தவிப்போரைக்
கண்டு
உணவு கொடுத்து
அவருடன்
உண்டு மகிழ்வோமே
கர்த்தரின்
அருள் பெறுவோமே.
கண்ணால்
காணும்
காட்சி யாவும்
கர்த்தராகவே
இருக்கட்டும். நம்
வாய் வார்த்தை
இயேசுவின்
நாமத்தையே
உச்சரிக்கட்டும்
கஷ்டப்படுவோரைக்
கண்டால்
கருணை பிறக்கட்டும்
செல்வம் பெற்றவர்
வறியவருக்கு
வழங்க
மனம் திறக்கட்டும்
வாருங்கள்
அன்பரே
இனி... வருங்காலம்
இயேசுவின்
வருகை நேரமே
இனி... எல்லா காலமும்
நமக்கு
வசந்த காலமே.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# கோழி – சேவல்

சர்வ சாதாரணமாக எல்லா நாடுகளிலும் அறியப்பட்டுள்ள பறவை கோழி இனமாகும். சேவல் அழகான தோற்றமுடையது. சேவல் உணவை கண்டதும் உயர் தொனியில் கொக்கரித்து இரை உள்ள இடத்தை கிளறி கிளறி குஞ்சுகளையும், பேடை கோழியையும் கூப்பிட்டு உண்ணவிடும். அவை கூவும் ஆற்றல் கொண்டது. சுற்று வட்டாரத்தில் ஏற்படும் திடீர் குழப்பத்தினாலும் சேவல் கூவும். இயேசு கிறிஸ்து தாம் படப்போகும் பாடுகளைப் பற்றியும் மரணத்தை பற்றியும் தம்முடைய சீடர்களிடம் பேசும் போது, "இயேசு பேதுருவை நோக்கி: இந்த இராத்திரியிலே சேவல் கூவுகிறதற்கு முன்னே, நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்." (மத்தேயு 26:34) இயேசுவானவர் கைது செய்யப்பட்ட பொழுது அவருடைய சீடர்கள் அவரை கைவிட்டு ஓடிவிட்டார்கள். பேதுரு எப்படிபட்ட சூழ்நிலையிலும் தைரியத்துடன் இருக்க முடியும் என்று நினைத்தான். அங்கு நின்றவர்கள் நிச்சயமாக அவன் இயேசுவோடு இருந்தவன் என திட்டமாக கூறும் போது, பேதுரு நடுநடுங்கி போனான். வினாடியில் எல்லாவற்றையும் மறந்து, தான் உயிர்பிழைத்தால் போதும் என்ற நிலைக்கு வந்து, இயேசுவை சபிக்கவும் சத்தியம் பண்ணவும் செய்தான். உடனே சேவல் கூவிற்று. "அப்பொழுது கர்த்தர் திரும்பி, பேதுருவை நோக்கிப்பார்த்தார். சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன வசனத்தை உடனே பேதுரு நினைவுகூர்ந்து, வெளியே போய், மனங்கசந்து அழுதான்" (லூக்கா 22:61,62). இன்றும் ஆண்டவராகிய இயேசு நம்மை நோக்கி பார்க்கிறார். எத்தனையோ முறை நாம் அவருக்கு விரோதமாக செயல்படுகிறோம். இருப்பினும் அவர் நம்மை சேர்த்தணைத்து கொள்ள விரும்புகிறார். மேலே வானத்தில் பருந்து பறப்பதை காணும் பேடையும் சேவலும் தலையை அசைத்து ஒரு வினோத ஒலி எழுப்பும். அந்த எச்சரிக்கையை புரிந்து கொண்டு அதன் கோழி குஞ்சுகள் ஓடி வந்து தாய் கோழியின் சிறகுக்குள் புகுந்து கொள்ளும். தேவனுடைய குரலை நாம் அடையாளம் கண்டு புரிந்து கொள்ளுகிறோமா? சாத்தான் நம்மை தடுமாற செய்யும் சூழ்நிலைகள் வரும் போது தேவனுடைய எச்சரிப்பின் சத்தத்தை புரிந்து கொண்டு அவருடைய செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவோமா? "நீர் எனக்குத் துணையாயிருந்ததினால், உமது செட்டைகளின் நிழலிலே களிகூருகிறேன்." (சங் 63:7) தென்னாட்டில் ஒரு ஊரில் பயங்கர தீ விபத்தில் வீடுகள் எரிந்து சாம்பலாயின. அழிந்து போன ஒரு வீட்டில் எஞ்சிய பொருட்களை தேடும் பொழுது, மூலையில் கல் இடுக்கில் ஒரு பெட்டைக்கோழி அப்படியே கருகி படுத்திருந்தது. அதைத் தள்ளிப்பார்க்க அதன் அடியிலிருந்து உயிருடன் அநேக கோழி குஞ்சுகள் ஓடி வந்தனவாம். இந்த செய்தி, செய்தித்தாளில் வந்தது.

இன்றும் நமக்காக ஐங்காயங்களை கோர குருசில் ஏற்று, சிலுவையில் மரணத்தை ஜெயித்த இயேசு, "கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின்கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும்வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன், உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று." (மத்தேயு 23:37) என அங்கலாய்க்கிறார். அன்பானவர்களே, ரூத் தனக்கு நேரிட்ட இழப்புகள், சோதனைகள் நடுவே கர்த்தரை நம்பி தன் மாமியாருடன் பெத்லகேம் வந்ததால், "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன்கிடைப்பதாக" (ரூத் 2:12) என்ற போவாஸ் ஆசீர்வாதத்தின் படி ஆசீர்வதிக்கப்பட்டு, அவர்களின் வம்சாவளியில் இயேசு பிறந்தார். இன்றும் நமக்கு நேரிடும் சோதனைகள், பாடுகள், இழப்புகளின் நடுவே கர்த்தரை நம்பி அவரது செட்டையின் மறைவிலே அடைக்கலம் புகுவோம். தேவன் நம்மை ஆசீர்வதித்து உயர்த்துவார்.

கோழி தன் குஞ்சுகளை கூட்டி சேர்ப்பது போல
கூவி அழைக்கிறாரே ஜீவன் தந்த இரட்சகர்.
சாக்கு போக்கு சொல்லாமல் ஜல்தியாய் ஓடி வந்து
காக்கும் செட்டைகளின் கீழே கண்டடைவாய் இரட்சிப்பு.

-இனிதா மோசஸ்

## Answer sent the following children for the month of February 2016

### Age 6 and Above

1. Alston Samuel Alwin
2. Jeba Vincent Paul Selvam
3. Jerson Chris Vijil
4. Naysa Christina Sheryl S
5. Aaron Darwin Allen
6. Edlyn Thayal Durai Rajan
7. Jebez Jeyasingh
8. Dany Solomon
9. Hennah Solomon
10. Jaymen Joseph
11. Jaymie Joseph
12. Kevin Arulson

### Age 12 and Above

1. Shamitha Sigamony
2. Carona Allen
3. Kashya Sharon Jeyasingh
4. Joysha Mohan
5. T.Angel Sara
6. Jehoash Jonah

## வாழ்த்துகிறோம்

**"இது கர்த்தரால் ஆயிற்று, நாங்கள் மகிழ்ந்திருக்கிறோம்"**

கர்த்தருடைய கிருபையால் பிப்ரவரி மாதம் 3–ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mr.Manova Lawrence & Mrs. Joy Praiselyn
இவர்களை திருச்சபையாக வாழ்த்துகிறோம்.

# தெரிந்த சத்தியம்! தெரியாத உண்மை!!

## ஆபிராம் & பாபேல் கோபுரம்

தேராகுவின் மூத்த குமாரன் ஆரான் தனது 39-வது வயதில் லோத்தைப் பெற்றான். பின்பு மில்காளையும், சாராயையும் பெற்றான். சாராயை பெற்ற போது அவனுக்கு வயது 42. இது ஆபிராமின் பத்தாவது வயதில் நடந்தது. அப்பொழுது ஆபிராமும் அவனுடைய தாயும் குகையைவிட்டு வெளியே வந்தனர். ராஜாவாகிய நிம்ரோத்தும் அந்த சங்கதிகளை மறந்து போனான். ஆபிராம் குகையை விட்டு வெளியேறினபின்பு நோவாவிடமும் அவனது குமாரன் சேமிடமும் வந்த சேர்ந்தான். அவர்கள்மூலமாக தேவனுடைய கட்டளைகளையும், வழிகளையும் கற்றுக்கொண்டான். ஆபிராமை யாரும் நினைவுகூரவில்லை. ஆபிராம் 39 வருடம் நோவாவின் வீட்டிலிருந்தான். அவன் தனது 3-வது வயதுமுதலே தேவனைப் பற்றி அறிந்திருந்தான். ஆகவே நோவாவும் அவனது மகனாகிய சேமும் சொன்ன வார்த்தைகளை வாழ்க்கையின் இறுதிவரையிலும் கடைபிடித்தான்.

அப்பொழுது வாழ்ந்த மக்கள் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்து, அவரை விட்டு அந்நிய தேவர்களைச் சேவிக்க ஆரம்பித்திருந்தார்கள். தங்களை உண்டாக்கின கடவுளை மறந்து, ஒவ்வொருவரும் தங்களுக்கென்று பேசமுடியாத, பதில் தர முடியாத கற்களினாலும், மரங்களினாலும் தங்களுக்கு தெய்வங்களை உண்டு பண்ணி அவற்றை வணங்கினார்கள். இதற்கு ராஜாவும், அவனது ஊழியக்காரர்களும், தேராகுவும் அவனது பணிவிடைக்காரர்களும், முன்னோடியாக இருந்தனர். தேராகு வருடத்தின் மாதத்திற்கு ஒன்றாக 12 பெரிய தெய்வங்களை மரத்தினாலும் கற்களினாலும் உண்டு பண்ணியிருந்தான். ஒரு மாதம் ஒரு தெய்வத்தை வழிபடுவான். மறு மாதம் அடுத்த தெய்வத்தை வழிபடுவான். அவற்றிற்கு பான மற்றும் போஜனபலிகளையும் வார்த்து வந்தான்.

இப்படி அனைவரும் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானவற்றை நடப்பித்து துன்மார்க்கமாய் வாழ்ந்துவந்தனர். ஆனால் கர்த்தரின் பார்வையில் அருமையாய் இருந்த நோவாவையும் அவன் குடும்பத்தையும் தவிர ஒருவரும் கர்த்தரிடத்தில் திரும்பவில்லை. நோவாவின் வீட்டிலிருந்த ஆபிராமை எவரும் அறியவில்லை. தேவன் ஆபிராமோடே இருந்தார். தேவன் ஆபிராமிற்கு நல்ல புரிந்துகொள்ளும் இருதயத்தைக் கொடுத்திருந்தார். ஆகவே, எல்லா தலைமுறையினரது பிரயாசமும் விருதாவென்றும், அவர்களுடைய தெய்வங்களும் விருதாவென்றும் அறிந்திருந்தான்.

அப்பொழுது ராஜா நிம்ரோத்தின் குமாரர்கள் ஒன்றாகக்கூடி தங்களுக்குப் பேருண்டாக ஒரு கோபுரத்தை கட்டி, பரலோகம் செல்லத்தக்கதாகவும், பூமியிலே தங்கள் பெயர் நிலைத்திருக்கவும், தங்கள் எதிரிகளின் கைக்கு காப்பாற்றிக் கொள்ளத்தக்கதாகவும், தாங்கள் பிரிந்து போகாமல் ஒன்றாக இருக்கவும் செய்வோம் என்று ஆலோசனைப் பண்ணினார்கள். அவர்கள் ராஜாவினிடம் சென்று தங்களின் விருப்பத்தை தெரிவித்தார்கள். ராஜாவும் அதற்கு சம்மதித்தான். நிம்ரோத்தின் குடும்பத்தினர் அனைவரும் சுமார் ஆறு இலட்சம் பேர் ஒன்று திரண்டு பூமியெங்கும் சுற்றித்திரிந்து கோபுரம் கட்டுவதற்கான சரியான இடத்தை தேடி அலைந்தனர். பின்னர் 2 நாள் பிரயாண தூரத்திலிருந்த சிநேயார் என்ற இடத்தின் கிழக்கிலிருந்த பள்ளத்தாக்கே கோபுரம் கட்ட சரியான

இடம் என்று கண்டறிந்து அங்கே தங்கினார்கள். அங்கே செங்கல்களை அறுத்து, சுட்டு தங்களுடைய கனவு கோபுரத்தை கட்டத்துவங்கினார்கள். அவர்கள் அதைக் கட்டி தேவனுக்கு விரோதமாக பாவஞ்செய்து வந்தார்கள். ஏனெனில் அவர்கள் கட்டும் அந்த கோபுரத்தின்மூலம் தாங்கள் தேவனோடு போரிடவும், தேவனுடைய வாசஸ்தலமாகிய பரலோகம் செல்லவும் முடியும் என்று எண்ணிக்கொண்டார்கள்.

மக்கள் கூட்டம் மூன்று வெவ்வேறு எண்ணம் கொண்டிருந்தார்கள். ஒரு கூட்டம் மக்கள் தாங்கள் பரலோகம் சென்று தேவனோடு போர் செய்வோம் என்றும், மறு கூட்டம் தாங்கள் பரலோகம் சென்று தங்களுடைய தெய்வங்களை அங்கே வைத்து அவைகளை சேவிப்போம் என்றும், ஒரு கூட்டம் தாங்கள் பரலோகம் சென்று வில்லோடும் அம்போடும் ஈட்டியோடும் அவரை கொலைசெய்வோம் என்றும் கூறிக்கொண்டார்கள். கடவுள் அவர்களெல்லாருடைய வேலைகளையும் அவர்களுடைய துர்சிந்தனைகளையும் அறிந்து அவர்கள் கட்டும் கோபுரத்தைக் கண்டார்.

அவர்கள் அந்த கோபுரத்தை கட்டும்போது பெரியதாகவும், உயரமானதாகவும், பலமானதாகவும் கட்டினார்கள். அதன் உயரத்தின்காரணமாக அவர்கள் செங்கல் அறுப்பது கோபுரத்தைக் கட்டுபவர்களை சென்றடைய பல நாட்களானது. இப்படியாக தினமும் வேலை நடைபெற்றது. அவர்கள் கையிலிருக்கும் செங்கல் கீழே விழுந்து நொருங்கினால் கூடி அழுவார்கள். ஆனால் அங்கிருந்து மனிதர் யாரேனும் விழுந்து மடிந்தால் யாரும் அதை கண்டுகொள்வதில்லை.

பலர் வானத்தை நோக்கி அம்புகளை எய்தனர். தேவன் அவர்கள் எண்ணங்களை அறிந்து அவைகள் இரத்தம் தோய்ந்ததாக விழச் செய்தார். இதைக் கண்ட மக்கள் வானலோகத்தில் உள்ளவர்களை கொன்று விட்டோம் என்று மகிழ்ச்சியடைந்தனர். இப்படி தேவன் அவர்களிடையே தவறுகளை இழைக்கச்செய்தார். இதை கட்ட பல நாட்கள், பல வருடங்கள் சென்றது. தேவன் அவர்களுடைய மொழிகளை தாறுமாறாக்க தம்முடைய தூதர்களுடன் இறங்கி வந்தார். ஒருவனுடைய மொழியை மற்றவன் புரியமுடியாமல் போயிற்று. கட்டடம் கட்டுகிறவன் கேட்காத கல்லை வேலையாள் கொண்டுவந்தால், கோபத்தில் அதை அவன் மடியும்படி அவன்மேல் எறிந்துவிடுவான். இப்படி பல நாட்களாக பலர் கொல்லப்பட்டனர்.

தங்களுக்கு ஏதோ ஆபத்து சூழ்ந்துள்ளதை அறிந்து கோபுரம் கட்டுவதை விட்டுவிட்டு சிதறிப்போனார்கள். பூமியெங்கும் வழங்கின பாஷையைக் கர்த்தர் தாறுமாறாக்கினபடியால், அதின் பேர் பாபேல் என்னப்பட்டது. தேவன் மூன்றுவிதமான கொள்கையுடைய அவர்களை பூமியின்மீதெங்கும் சிதறிப்போகப்பண்ணினார். அந்த கோபுரத்தின் மூன்றிலொரு பகுதியை பூமி விழுங்கியது. மூன்றிலொரு பகுதியை வானத்தின் அக்கினி பட்சித்தது. அடுத்த மூன்றிலொரு பகுதி அன்று பூமியில் மீந்திருந்தது. பூமியில் மீந்திருந்த கோபுரத்தை சுற்றி வர மூன்று நாட்கள் செல்லும். இப்படி எண்ணிக்கைக்கு அடங்காத மனிதர்கள் பாபேல் கோபுரம் மூலமாக மடிந்தார்கள். ஏனையோர் குடும்பம் குடும்பமாக பிரிந்து சென்று நாட்டிற்கு தக்கதாக, தங்கள் மொழிக்குத் தக்கதாக, நகரத்திற்கு தக்கதாக தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொண்டனர். பின்னர் தங்கள் தங்கள் குடும்பத்திற்கு என பல நகரங்களை உருவாக்கி தாங்கள் சிதறடிக்கப்பட்ட பூமியிலே வாழ்ந்தார்கள். (தொடரும்....)

நன்றி: யாசேரின் புத்தகம் தொகுப்பு: ஷீபா ரெஜினால்ட்

## திருச்சபை ஜெபநாள் 06-03-2016 (முதல் ஞாயிறு)

"என் நீதியின் தேவனே,
நான் கூப்பிடுகையில் எனக்குச் செவிகொடும்...." சங்கீதம் 4:1

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

### துதிகள்

- இம்மட்டும் நம்மைப் பாதுகாத்து, பராமரித்து இப்புதிய ஆண்டைக் காணச்செய்த தேவனுக்கு நன்றி ஏறெடுப்போம். கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக அவரைத் துதிப்போம்.
- திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறவோம்.
- 12-02-2016 அன்று இளம் தம்பதியர் தியான கூடுகை ஆசீர்வாதமாக நடந்தேற கர்த்தர் பாராட்டின தயவுகளுக்காக அவரைத் துதிப்போம்.

### திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
